REFERENCE BOOK

LIBRARY
6 JUL 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 10th March 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER: இந்தச் சட்டசபைக் கூட்டத்திற்கு உங்கள் எல்லோரையும் வரவேற்கிறேன். இந்தக் கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப் படும். அதுவுமல்லாமல் முக்கியமான மசோதாக்கள் இந்தச் சபையின் முன்பு வைக்கப்படும். அவற்றையெல்லாம் நிறைவேற்றிவைக்க உங்களுடைய ஆதரவை எனக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

I—OBITUARY REFERENCE TO SRI A. B. SHETTY, DR. MAHOMED USMAN AND SRI G. HARISARVOTHAMA RAO

MR. SPEAKER: இந்தச் சட்டசபையின் பழைய காலத்து அங்கத்தினர்கள் இருவரும், தற்கால மேல்சபை அங்கத்தினர் ஒருவரும் இறந்து விட்டார்கள் என்ற செய்தியை உங்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன் முதலாக ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். அவர்கள் பழைய காலத்தில், மேல் சபைக்கு—அந்தக் காலத்தில் அதற்கு மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்று பெயர்—1926-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். பத்து ஆண்டுகளுக்கு அந்த சபையின் அங்கத்தினராக இருந்தார். தென் கன்னடப் பிராந்தியத்தில் மூன்று வருஷங்கள்—1932-லிருந்து 1935-ம் ஆண்டு வரைக்கும்—ஜில்லா போர்டு தலைவராக இருந்தார். அந்தப் பகுதியில் ஹரிஜனங்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நல்ல சேவை செய்து வந்தார். 1937-ம் ஆண்டில் சென்னை சுகாதார மந்திரிக்கு பார்லிமெண்டரி செக்ரடரியாக வந்தார். விடுதலைப் போராட்டத்தில பங்கெடுத்துக்கொண்டு 1941-ம் ஆண்டில் ஒன்பது மாதம் சிறையில் இருந்தார். இந்த அசெம்பிளி ஆரம்பித்த பிற்பாடு, தென் கன்னடப் பிராந்தியத்தில் இருக்கும் குந்தாபூர் தொகுதியிலிருந்து இந்தச் சபையின அங்கத்தினராக வந்தார். 1947-ம் ஆண்டில் சுகாதார மந்திரியாக வந்தார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் மந்திரி சபையிலும், ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் மந்திரி சபையிலும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மந்திரி சபையிலும், நமது முதல் மந்திரி காமராஜ் அவர்கள் மந்திரி சபையிலும் சுகாதார மந்திரியாக இருந்து நல்ல முறையில் வேலை செய்து வந்தார். ராஜ்யப் பிரிவினைக்குப் பிறகு அவர்கள் மைசூரில் சுகாதார மந்திரியாக நல்ல சேவை செய்து வந்தார். அவர் கடைசியாக எந்தத் தேர்தலிலும் நிற்காமல் ஓய்வு எடுத்துக்கொண்டார். அவர் வேலை செய்யும் காலத்தில் எல்லோருக்கும் நல்லவர் என்ற பெயர் வாங்கி, அவர்களிடத்தில் இருந்த இலாகாவை நல்ல முறையில் ஆண்டு வந்தார். அவர் இறந்துபோகும் போது அவருக்கு வயது 78.

இரண்டாவதாக, ஸர் முகமது உஸ்மான் அவர்கள் இறந்து போனார். 1924-ம் ஆண்டிலிருந்து கவுன்சில் அங்கத்தினராக இருந்தார்கள். சென்னை நகரசபையில் 1918-ல் இருந்து ஏழு ஆண்டுகள் அங்கத்தினராக இருந்தார். நகரசபையின் தலைவர் பதவியைக்கூட 1924-ம் ஆண்டில் ஏற்றுக்கொண்டு நன்றாக வேலை செய்து வந்தார். நம்முடைய சென்னை அரசாங்கத்தில் அந்தக் காலத்தில் எக்ஸிகியுடிவ் கவுன்சில் என்று சொல்லப்பட்ட மந்திரி சபையில் அங்கத்தினராக இருந்தார். மத்திய அரசாங்கத்தின் மந்திரியாகக்கூட விளங்கி நன்றாக வேலை செய்து வந்தார். நம்முடைய சென்னை மாகாணத்தின் ஆக்டிங் கவர்னராக 1934-ம்

LIBRARY
6 JUL 1960

அவர் பதவி ஏற்றுக்கொண்டு நன்றாக வேலை செய்து வந்தார். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1942-ம் ஆண்டிலிருந்து 1946-ம் ஆண்டு வரைக்கும் மிக நன்றாக வேலை செய்து வந்தார். ரோட்டரி, ரெட்கிராஸ், அஞ்சுமான் என்கிற பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து நல்ல முறையில் வேலை செய்து வந்தார். முஸ்லிம்களுக்கு மாத்திர மல்லாமல் எல்லோருக்கும் நல்லவராக விளங்கி பேரும் புகழும் பெற்றார். அவர் இறந்துபோகும்போது நமது மேல்சபையில் அங்கத்தினராக இருந்தார். இறந்துபோகும்போது அவருக்கு வயது 75.

கடைசியாக, ஸ்ரீ ஜி. ஹரிஸர்வோத்தம ராவ் என்பவர் பழைய காலத்தில் கர்னூல் தொகுதியிலிருந்து மெம்பராக வந்தார். அவரும் பழைய சென்னை சட்டசபையில் அங்கத்தினராக இருந்து நல்ல வேலை செய்து வந்தார்.

இவர்கள் மூன்று பேரும் இறந்த செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் குடும்பத்தார்களுக்கு இந்தச் சபையினுடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் எல்லோரும் ஒரு நிமிஷம் எழுந்து நிற்கும்படி கனம் அங்கத்தினர்கள் எல்லோரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.)

II.—SWEARING-IN OF MEMBERS.

Sri R. J. Sundar Singh and Sri S. Pandiaraj were sworn in.

III.—ANNOUNCEMENTS.

(1) PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER: Under rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following to be the Panel of Chairman :—

1. Srimathi Kamalambuja Ammal.
2. Sri V. K. Krishnamurthy.
3. Sri T. Sampath.
4. Sri A. Govindasamy.
5. Sri M. Jagannathan.
6. Sri K. Sattanatha Karayalar.

IV.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

District Board School Teachers

*245 *Q.*—SRI K. ANBAZHAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) how many teachers in the District Board Schools were transferred in Ramanathapuram District in the months of June and July 1959;

(*b*) the amount of expenditure involved in the transfers by way of travelling allowance and daily allowance and personal effects;